IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**STC No. 152/2018**

**Dw1 – Aravind S/o. Palanisamy**

**Complainant Absent**. 256 **crpc petition filed and allowed**. **Accused Absent**. 317 **crpc petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 06.02.2026**

**மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் எ.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எங்களுடைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் 2017 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் ஆன்லைன் மூலம் தான் மஞ்சள் ஏலம் நடைபெறும் என்றால் சரிதான். ஏலத் தொகை வங்கியில் நேரடியாக செலுத்தப்படும் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் ஆன்லைன் பரிவர்த்தனை சம்பந்தமாக எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 01.08.2017 முதல் 31.12.2017 ம் தேதி வரையிலான காலகட்டங்களுக்கு உண்டான வங்கி கணக்குப் பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்த பதிவேடு தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். 2021 ல் விவரங்கள் நீதிமன்றம் மூலமாக கேட்கப்பட்டு 3 ஆண்டுகள் கழித்து 2024 ம் ஆண்டில் தான் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். அசல் பதிவேடுகளில் எங்கள் அதிகாரிகளின் கையெழுத்து மற்றும் சீல் இல்லை என்றால் சரிதான். தணிக்கை செய்யாததாலும், எங்கள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அதிகாரிகளின் கையெழுத்து மற்றும் சீல் இல்லாததாலும் மேற்படி ஆவணங்கள் ஏற்புடையதல்ல அல்ல என்றாலும், எதிரி கேட்டுக் கொண்டதிற்கிணங்க வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

3. ஈரோடு ரோட்டில் பெருந்துறை வாரச் சந்தைக்கு அருகில் விவசாயிகள் உற்பத்தி கூட்டுறவு சங்கம் உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி சங்கத்தில் கொப்பரை தேங்காய், மஞ்சள், நெல் ஆகியவை ஏலம் மூலம் விற்பனை செய்யும் குடோன் உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி கூட்டுறவு சங்கம் மூலமாக இயங்குகிறது. உற்பத்தி மற்றும் விற்பனை கூடம் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விவசாயிகள் அதன் மூலம் விற்பனை செய்வார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஏலம் சம்பந்தமான புகார்தாரரின் ஆன்லைன் கணக்குகளையும், ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் விற்பனை பட்டியலை ஒப்படைத்தால் உண்மை நிலை தெரிந்து விடும் என்பதால் அதை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரி கேட்டுக்கொண்டதிற்கிணங்க நடைமுறையில் இல்லாத ஆவணங்களை தாக்கல் செய்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை